

சிவோஹம் பாராயணத் தொகுப்பு

சிவார்ப்பண மஞ்சரி - *205*

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நாமாவளி

அடியார்கள் அனைவரும் எம்பெருமானின் அருள்பெற அர்ப்பணிப்பு

சிவோஹம் சிவார்ப்பண ஞானம் - 2025/05/27 சனிக்கிழமை

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நாமாவளி

(திருவாசக முற்றோதலில் பாடி களித்திட)

மாணிக்க-வாசக மாமணி-யே
மாதவத்-தோர்கள் சிகாமணி-யே 1

வாதவூர்-வந்தருண் மாதவ-மே
வாழ்வென்-றடைந்தவர்க் கே-தவமே 2

தேசிகமணி-யே திருமணி-யே
மாசறுமணி-யே மனமணி-யே 3

தவவேடத்-துச் சற்குரு-வே
சைவநற்-குருவே என்திரு-வே 4

அன்புருவே-எமது ஆரிய-னே
அகவிருள்-போக்கிடும் சூரிய-னே 5

வேதா-கமமுழு துணர்ந்தோ-னே
தீதான-வையுளந் தணந்தோனே 6

மந்திரிக்-குவமை பூண்டோ-னே
மனஞ்சிவத்-தேயுற ஆண்டோ-னே 7

சங்கரன்-குருவடி. சார்ந்தோ-னே
தத்துவ-ஞானம் தேர்ந்தோ-னே 8

குருந்தடிக்-குருமொழி பெற்றோ-னே
குவலயப்-பொய்வாழ் வற்றோ-னே 9

திருப்பெருந்-துறையை அடுத்தோ-னே
கருப்பெருந்-துறையை விடுத்தோ-னே 10

சத்திநி-பாதத்து உத்தம-னே
சத்துவ-குணனே சத்தமனே 11

உடல்பொருள்-ஆவி அளித்தோ-னே
ஓங்கு-சுகத்தில் களித்தோ-னே 12

ஐந்தெழுத்-துண்மை அறிந்தோ-னே
ஐலம்புலக்-காட்டை எறிந்தோ-னே 13

ஆனந்தக்-கடலாய் ஆழ்ந்தோ-னே
ஐயனடித்-துணை தாழ்ந்தோ-னே 14

சிவத்திருப்-பணியைக் களித்தோ-னே

செழியன்-பொருளை அளித்தோ-னே **15**

திருவாசக-மொழி திருவா-யா

சிவனடியே-தொழும் உயர்-நேயா 16

சிவமணத்-தேன்திகழ் செவ்வா-யா

சித்தம்-தெளிதரு நனிதூ-யா **17**

வைதிக-சைவம் வளர்த்தோ-னே

மெய்திகழ்-ஞான உளத்தோ-னே 18

உள்ளத்திருள்-தெறு மாதவ-னே

உயர்தரு-ஞான மா-தவனே **19**

நரிபரி-யாக்கப் பெற்றோ-னே

நம்பன்-அருட்பாங் குற்றோ-னே 20

வைகை-பெருக்குற வைத்தவ-னே

மாசறு-நெஞ்சின் மெய்த்தவ-னே **21**

சம்புவை-அடிமை ஆக்கிய-வா

தனிமதுரைத்-தெருப் போக்கிய-வா 22

கூலிக்குப்-பிட்ட தருந்திய-வா

கூடையைத்-தலையில் பொருத்திய-வா 23

முன்னோன்-முடிமண் ஏற்றிய-வா

முத்திக்-குறுநெறி சாற்றிய-வா 24

அற்புத-மூர்த்தி அருளா-ளா

அன்புரு -வேயதி சுகுணா-ளா 25

பிரம்படி-யேற்றிடப் பெம்மா-னே

பீடுறும்-அன்புசெய் எம்மா-னே 26

உலகமெலாம்-தொழ ஓங்கிய-வா

உயர்தவக்-கோலம் தாங்கிய-வா 27

பாண்டியன்-உய்யக் கொண்டவ-னே

பரகதிக்-காளாக் கண்டவ-னே 28

கழுக்குன்-றில்குருக் கோலம-தே

கண்டுகளித்-தருள் ஆரமு-தே **29**

சிவயோ-கத்தில் இருந்தவ-னே

சித்தம்-திருந்தப் பெருந்தவ-னே 30

புத்தரை-வென்றருள் புண்ணிய-னே

புகழ்பெறு-நின்மலக் கண்ணிய-னே **31**

புத்தரைச்-சைவம் சேர்த்தோ-னே

பொங்கு-மனத்திருள் தீர்த்தோ-னே 32

சிவசா-தனவழி நிறுத்தின-வா

சிதம்பர-மென்றறி வுறுத்தின-வா **33**

முகைமொழிந்-திடச் செய்தோ-னே

மூலமலத்-தொடர் கொய்தோ-னே 34

திருவாசகம்-அதை முன்னோ-னே

செங்கையில்-எழுதச் சொன்னோ-னே **35**

பாவை-யுடன்சொற் படியன்-றே
கோவை-யுரைத்த குணக்குன்-றே 36

தேனூ-றியதிரு வாயா-னே
நானூ-றருளிய தூயோ-னே 37

புகழ்வா-சகமறை வாக்கிய-னே
பொற்சபை-யேற்றிய பாக்கிய-னே 39

பேரா-னந்தப் பெருவாழ்-வே
பெற்று-நிலைத்தருள் எம்வாழ்-வே 40

மாணிக்க-வாசகர் மலரடி-யே
மாசற-நம்தலைக்கு அணிமுடி-யே 41

திருவா-சகமே மெய்வே-தம்
சித்தங்-கரைத்தரு நற்போ-தம் 42

கல்லையும்-உருக்க வல்ல-துவே
கதிவழி-சேர்க்க நல்லது-வே 43

திருவா-சகத்துக்கு உருகா-ரே
ஒருவா-சகத்துக்கும் உருகா-ரே 44

முத்தி-வழிக்கொரு நற்றுணே-யே
மோது-பவாம்புதிக் கோர்புணே-யே 46

என்பை-உருக்கும் பாட்டது-வே
இதுபோல்-உலகில் வேறெது-வே 47

பவநோய்க்-கொருபெரு மருந்தா-மே
பரலோ-கத்து விருந்தா-மே. 48

திருச்சிற்றம்பலம்

(**மாணிக்கவாசகர் ஆனி - மகம்**) - **மணிவாசக**:

முண்டசீர்ஷம் சிரோமாலம் திவ்யக்ஷமாலா விபூஷிதம்
கராக்ஷமணி பந்தாக்ஷம்க்ஞான முத்சாஞ்சபுஸ்தகம்
ஸவ்யேதராப்யாம் ஹஸ்தாப்யாம் ததானம் வஸ்த்ரவேஷ்டிதம்
சைவாகிருதிம் மஹாசாந்தம் பாவயேந் மணிவாசகம்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருவடி போற்றி